

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4



## அறிவிப்புகள்

## 2022 - 2023

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4

## அறிவிப்புகள்
## 2022 - 2023

**என். கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# அறிவிப்புகள்

## 2022 - 2023

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 33 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

## 1) 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் ரூ. 23.37 கோடி செலவில் வழங்கப்படும்.

விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ. 2.50 இலட்சம் முதல் ரூ. 4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு, துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் (ரூ. 2.25 இலட்சம் முதல் ரூ. 3.60 இலட்சம் வரை) வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஏற்படும் செலவு ரூ.23.37 கோடி ஆகும்.

**2) வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ. 55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடுகள் வாங்கிட மானியம் வழங்கப்படும்.**

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் தலா ரூ. 11.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க ரூ. 42.50 கோடி மானியமாக வழங்கப்படும்.

3) 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணாக்கருக்கு வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிகள் ரூ. 10.00 கோடி செலவில் வழங்கப்படும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு பயின்று வரும் 7,600 ஆதி திராவிட மாணாக்கர் மற்றும் 2,400 பழங்குடியின மாணாக்கர் என மொத்தம் 10,000 மாணாக்கருக்கு வேலைவாய்ப்புத் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான மொழித்திறன் (Communication Skills), திறனறித் தேர்வுகள் (Verbal & Logical reasoning and Aptitude tests ) மற்றும் குழு விவாதம் (Group discussion ) – ஆகிய இனங்களில் Aspiring Minds Computer Adaptive Test (AMCAT) பயிற்சிகள் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் ரூ.10.00 கோடி செலவில் வழங்கப்படும்.

4) 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 2.50 கோடி செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்திடும் பொருட்டு, 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்திட பயிற்சிகள் வழங்கப்படும். சேவை சார்ந்த தொழில்கள் அமைக்கத் தேவையானப் பயிற்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (CIPET), தேசிய நவீன ஆடை வடிவமைப்பு நிறுவனம் (NIFT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), மத்திய உணவு தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (CFTRI), நெட்டூர் தொழில் நுட்ப பயிற்சி மையம் (NTTF), இந்தியன் இன்ஸ்ட்யூட் ஆப் பேக்கேஜிங் (IIP) போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் ரூ.2.50 கோடி செலவில் வழங்கப்படும்.

**5) 200 நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் நிலம் வாங்க ரூ. 10.00 கோடி செலவில் மானியம் வழங்கப்படும்.**

நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் 200 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள்.

**6) பழுதடைந்துள்ள 10 ஆதி திராவிடர் பள்ளி மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ. 45.45 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.**

ஆதி திராவிட மாணாக்கர் தமது பள்ளிக் கல்வியை இடைநிற்றலின்றித் தொடர்ந்திடும் வகையில் மிகவும் பழுதடைந்துள்ள சேத்தியாதோப்பு, குளித்தலை, மீன்சுருட்டி, திருவண்ணாமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவர் விடுதிகள், நிலக்கோட்டை, செய்யூர், வந்தவாசி, செஞ்சி மற்றும் திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 10 விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ. 45.45 கோடி செலவில் கட்டப்படும்.

**7) வாடகைக் கட்டடங்கள் / பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் 5 ஆதி திராவிட மாணாக்கர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 28.35 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.**

ஆதி திராவிடர் மாணாக்கரின் உயர்கல்விக்கு உதவிடும் பொருட்டு அவர்கள் பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலும் வகையில், இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மாணவியர் விடுதி மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் கடலூர் மாணவியர் விடுதி, கோயம்புத்தூர் (வடக்கு) மாணவர் விடுதி, திண்டுக்கல் மாவட்டம், பழனி மாணவர் விடுதி மற்றும் திருப்பூர் மாணவர் விடுதி ஆகிய 5 கல்லூரி மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ. 28.35 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.

**8) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 மேல்நிலைப் பள்ளிகள் ரூ. 16.26 கோடி செலவில் மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.**

வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட கற்பிக்கும் திறன் ஆகிய வசதிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம் - ஈஞ்சம்பாக்கம், திருச்சி மாவட்டம் - காட்டூர், திருவாரூர் மாவட்டம் - திருவாரூர் ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம்- பேச்சிப்பாறை, நீலகிரி மாவட்டம்- குஞ்சப்பனை, சேலம் மாவட்டம்- வெள்ளிகவுண்டனூர் ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 6 பள்ளிகள், ஆங்கில மொழிப் பயிற்சி, உயர்தொழில்நுட்ப ஆய்வகம், அறிவுத்திறன் வகுப்பறைகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி ஆகிய சிறப்பம்சங்களுடன் கூடிய மாதிரிப் பள்ளிகளாக ஒரு பள்ளிக்கு தலா ரூ. 2.71 கோடி வீதம், மொத்தம் ரூ.16.26 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

**9) 11 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் குடியிருப்புகளில் ரூ. 17.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.**

திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய 11 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் ரூ. 17.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**10) 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ. 10.58 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.**

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்திடும் பொருட்டு, 9 கல்லூரி மாணவியர் விடுதிகள் மற்றும் 74 பள்ளி மாணவியர் விடுதிகள் ஆக மொத்தம் 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ. 10.58 கோடி செலவில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

**11) 500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க ரூ. 2.25 கோடி மானியம் வழங்கப்படும்.**

பெருமளவில் விவசாயத் தொழில் புரியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை பொருளாதாரத்தில் தற்சார்பு உடையவர்களாக மாற்றிடும் வகையில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ. 7.50 கோடி மதிப்பீட்டில் கறவைமாடுகள் வாங்க தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 2.25 கோடி மானியம் வழங்கப்படும்.

**12) 100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ. 90.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக நியமனம் பெற்று, ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் தொடங்கிட, தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ- 90.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

**13) 50 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்க ரூ. 45.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.**

50 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில், உறைவிப்பான் (Freezer), குளிர்விப்பான் (Chiller) போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட, ரூ. 45.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

## 14) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வாய்ப்புள்ள மாவட்டங்களில், தலா 50 உறுப்பினர்களைக் கொண்ட 40 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்படும். அச்சங்கங்களுக்குத் தேவைப்படும் பால் குவளைகள் (Milk Cans), பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்க தலா ரூ. 1.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்படும்.

**15) 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ. 1.00 கோடி செலவில் வழங்கப்படும்.**

1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனப்புல் வளர்க்க ஒரு பயனாளிக்கு ஏக்கருக்கு ரூ. 10,000/- மதிப்பீட்டில் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் / ஆவின் நிறுவனம் மூலம் ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்.

**16) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 3.00 இலட்சமாக உயர்த்தப்படும்..**

தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு தற்போது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பயனடையும் வகையில், தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 3.00 இலட்சமாக உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.

**17) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்காக தொழில்நுட்ப - பொருளாதார ஆய்வு மூலம் ரூ. 1.00 கோடி செலவில் திட்ட அறிக்கை வங்கி ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் துவங்க சாதகமாக உள்ள தொழில் திட்டங்களைக் கண்டறிந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் புதிய வகை தொழில்களில் ஈடுபட உதவிடும் பொருட்டு மாவட்ட வாரியாக தொழில்நுட்ப - பொருளாதார ஆய்வு (Techno-Economic Survey) நடத்தப்படும். அதன் மூலம், திட்ட அறிக்கை வங்கி (Project Bank) ஒன்று ரூ. 1.00 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**18) 7 மாவட்டங்களில் உள்ள 88 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ. 9 . 24 கோடி மதிப்பீட்டில் வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள் கட்டப்படும்.**

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர் பயன்பெற்றிடும் வகையில், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள 88 பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள சமையலறைகளுக்கு மாற்றாக வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள் தலா ரூ. 10.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 9.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**19) 305 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ. 7.46 கோடி செலவில் வழங்கப்படும்.**

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் தேவையின் அடிப்படையில் தரம் உயர்த்தப்பட்டு வருவதால், மாணாக்கர் வசதியாக கல்வி பயிலும் வகையில், 99 நடுநிலைப் பள்ளிகள், 108 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 98 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான 8,060 நீள் இருக்கைகள் மற்றும் 305 பள்ளிகளுக்கு தேவையான இரும்பு அலமாரி ஆகிய அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.7.46 கோடி செலவில் வழங்கப்படும்.

## 20) ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ. 5.70 கோடி செலவில் கழிவறை மற்றும் குளியலறைகள் கட்டப்படும்.

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 19 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 21 மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் 10,796 மாணாக்கருக்கு சுகாதாரமான கழிவறை வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையில் 40 கழிவறைகள் மற்றும் இத்துறையின் கீழ் இயங்கும் 43 விடுதிகளுக்கு 147 கழிவறைகள் மற்றும் 124 குளியலறைகள் ஆகிய சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் ரூ.5.70 கோடி செலவில் ஏற்படுத்தித் தரப்படும்.

**21) 126 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் ஆய்வு உபகரணங்கள் வழங்கப்படும்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 126 மேல்நிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு செயல்முறைக் கல்வியின் அவசியம் கருதி, அப்பள்ளிகளில் உள்ள இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வகங்களுக்கு தேவையான அறிவியல் உபகரணங்கள், வேதிப்பொருட்கள் மற்றும் உயிரியல் உருவ மாதிரிகள் ஆகியவை ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 22) ஏழு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் புதிதாக துவங்கப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான உயர்கல்வி வகுப்புகளை பெருக்கிடவும், அவர்கள் தொலை தூரம் சென்று கல்வி பயில்வதில் எழும் இடர்ப்பாடுகளை அகற்றி அவர்கள் பாதுகாப்பாகத் தங்கி கல்வி பயிலும் வகையிலும், திருப்பூர் மாவட்டம்-- உடுமலைப்பேட்டை, திருவாரூர், தேனி மாவட்டம்-- கோட்டூர் ஆகிய மூன்று இடங்களில் 3 ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதிகள் மற்றும் திருச்சி, தருமபுரி, செங்கல்பட்டு, நாமக்கல் ஆகிய 4 மாவட்டங்களில் 4 பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 7 கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ. 3.35 கோடி செலவில் புதிதாகத் துவங்கப்படும்.

## 23) ஐந்து ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் கலைப் பாடப்பிரிவுகள் ரூ. 1.68 கோடி மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும்.

ஆதிதிராவிட மாணாக்கர் அறிவியல் பாடங்கள் தவிர கலைப் பாடங்களைப் (Arts Group) பயில உதவிடும் வகையில். இது வரை கலைப் பாடப்பிரிவுகள் இல்லாத, காஞ்சிபுரம் மாவட்டம் – மௌலிவாக்கம், திருவள்ளூர் மாவட்டம் - தேர்வாய், மதுரை மாவட்டம் – அச்சம்பட்டி, திருச்சி மாவட்டம் – மிளகுபாறை மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – கடம்பன்குளம் ஆகிய 5 இடங்களில் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களைக் கொண்ட கலைப் பாடப்பிரிவுகள் ரூ. 1.68 கோடி மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும்.

**24) 104 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ. 1.15 கோடி செலவில் எரிவாயு இணைப்பு வழங்கப்படும்.**

ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கருக்கு விரைவாக சமையல் செய்து உணவு வழங்கிடும் பொருட்டு, இது வரை எரிவாயு இணைப்பு இல்லாத 104 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு எரிவாயு இணைப்பு ரூ. 1.15 கோடி செலவில் வழங்கப்படும்.

**25) 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 1.96 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.**

தூய்மைப் பணியாளர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ள 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் (Sanitary Marts) தலா ரூ. 15.00 இலட்சம் வீதம், ரூ. 1.96 கோடி மதிப்பீட்டில் அமைக்க ரூ. 98.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

## 26) பழங்குடியினர் வருவாய் ஈட்டும் பொருட்டு உன்னிக்குச்சி மூலம் தளவாடப் பொருட்கள் தயாரிக்க ரூ.1.80 கோடி செலவிடப்படும்.

நீலகிரி மாவட்டம் முதுமலை வனப்பகுதி மற்றும் ஈரோடு மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் உள்ள உன்னிக்குச்சி செடிகளின் (Lantana camara ) பிரம்பினை பயன்படுத்தி செய்யப்படும் மேசை, நாற்காலி, சோபா உள்ளிட்ட பல்வேறு தளவாடங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இத்தகைய பொருட்களை செய்வதற்கு தகுந்த பயிற்சிகள் அளித்தல், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் வாங்குதல், சந்தைப்படுத்துதல் ஆகிய பணிகளை உள்ளடக்கிய பணிகளுக்கு ரூ. 1.80 கோடி செலவிடப்படும்.

**27) தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இது வரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 3,826 பயனாளிகள் பயன் பெறுவர்.

**28) 50 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணைய வழி நூலகங்கள் ரூ. 70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படும்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் தங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டும், 25 விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக 25 விடுதிகளில் இணையவழி நூலகங்கள் (e-Library) என மொத்தம் 50 விடுதிகளில் ரூ. 70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக நூலகங்கள் அமைக்கப்படும்.

**29) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணாக்கர் மற்றும் இளைஞர்களுக்கு நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ. 50.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

தற்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் வங்கி மற்றும் காப்பீட்டுத் துறைகளில் கிடைக்கும் வாய்ப்புகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 500 மாணாக்கர் மற்றும் தாட்கோ மூலம் தேர்வு செய்யப்படும் 100 ஆதி திராவிட இளைஞர்களுக்கு நிதி மேலாண்மை (Financial Management), காப்பீடு (Insurance) மற்றும் வங்கிச்சேவை (Banking) போன்ற நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி ரூ. 50.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**30) 90 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளில் ரூ. 50.00 இலட்சம் செலவில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்படும்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, 78 இளங்கலை, 6 முதுகலை, 2 பாலிடெக்னிக் மற்றும் 2 ஐ.டி.ஐ மாணவியர் விடுதிகள் என மொத்தம் 88 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 90 விடுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் இதர சாதனங்கள் ரூ. 50.00 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

## 31) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டிற்கு 3 முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணாக்கரின் உடல் நலனை பேணிப் பாதுகாத்திடும் பொருட்டு 183 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டிற்கு 3 முறை ரூ. 17.00 இலட்சம் செலவில் மருத்துவப் பரிசோதனை முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

**32) 20 ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 15.00 இலட்சம் செலவில் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்படும்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர் அன்றாட நிகழ்வுகளை அறிந்து கொள்ளவும் மற்றும் பொது அறிவினை வளர்த்துக் கொள்ளவும், 20 ஆதி திராவிடர் நல கல்லூரி விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளுக்கு 55 அங்குலம் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ. 15.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**33) அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் மற்றும் கலாச்சாரங்கள் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒலி / ஒளி ஆவணமாக பதிவு செய்யப்படும்.**

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரின் கலாச்சாரங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் சென்று விழிப்புணர்வு ஊட்டவும், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டின் பண்டைய பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடும் வகையிலும், தோடர், கோத்தர், குரும்பர், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கன் ஆகிய 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் (ethnographic research) மேலும் அவர்களது கலாச்சாரங்களை அழியா வண்ணம் பாதுகாக்க ஒலி / ஒளி ஆவணமாக (Audio and video documentation) ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் பதிவு செய்யப்படும்.

**என். கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.